நடவடிக்கையின் தலைப்பு : அதிசய வார திட்டப்பணி - "தோசை"

1. நடவடிக்கையின் பின்னணி:

இந்த அதிசய வார திட்டப்பணி மார்ச் மாதம் நடைபெற்றது. 'லட்டு' என்னும் பெரிய புத்தகத்தில் ஒரு குடும்பத்தினர் உணவகத்துக்குச் சென்று தோசை சாப்பிட்டனர். இதனால், முதலாம் ஆண்டு பிள்ளைகள் தோசை சுட தங்கள் ஆவலை வெளிப்படுத்தினார்கள். மேலும், பிள்ளைகள் வட்ட வடிவங்களிலும் வேறு வடிவங்களிலும் தோசை சுட ஆசைப்பட்டார்கள்.



2. நோக்கங்கள்:

- பிள்ளைகள் தோசை சுடக் கற்றுக்கொள்வார்கள்.
- பிள்ளைகள் தோசை மாவு தயாரிக்கத் தேவையான பொருள்களின் பெயர்களைத் தெரிந்துகொள்வார்கள்.
- பிள்ளைகள் பல வடிவங்களில் தோசை சுடக் கற்றுக்கொள்வார்கள்.
- பிள்ளைகள் விருந்தோம்பல் என்னும் தமிழர் பண்பாட்டைப்பற்றித் தெரிந்துகொள்வார்கள்.

3. நடவடிக்கையின் படிநிலைகள்:

அதிசய வாரத் திட்டப்பணி மூன்று படிநிலைகளைக்கொண்டது.

## முதல் படிநிலை: நான் தெரிந்து கொள்ள விரும்புவது...

பிள்ளைகள் எப்படி தோசை மாவைத் தயாரிப்பது என்பதையும் எப்படி தோசையைப் பல வடிவங்களிலும் நிறங்களிலும் சுடுவது என்பதையும் தெரிந்துகொள்ள விரும்பினார்கள்.

பிள்ளைகள் சாதா தோசை, முட்டைத் தோசை, மசாலாத் தோசை ஆகியவற்றைச் சட்னி, சாம்பார், கோழிக் குழம்பு, சீனி முதலியவற்றைத் தொட்டுச் சாப்பிட்டார்கள். பிறகு, அவர்கள் தங்களுக்கு மிகவும் பிடித்தவற்றைப்பற்றிக் கலந்துரையாடினார்கள்.



பிள்ளைகள் பெரிய புத்தகத்தில் உள்ள தோசை படத்தைச் சுட்டிக்காட்டுதல்





பிள்ளைகள் விதவிதமான தோசைகளை ருசித்து உண்ணுதல்

## இரண்டாம் படிநிலை: நான் கண்டுபிடித்தவை….

தோசை மாவு தயாரிப்பதற்கு வேண்டிய பொருள்களைப் பிள்ளைகள் கண்களால் பார்த்தும், கைகளால் உணர்ந்தும் மகிழ்ந்தார்கள். மேலும், அவர்கள் அந்தப் பொருள்களின் பெயர்களையும் தெரிந்துகொண்டார்கள். பிள்ளைகள் தங்களுக்கு மிகவும் பிடித்த தோசையைப் பட அட்டைகளிலிருந்து தேர்வு செய்தார்கள்.





பிள்ளைகள் தோசை மாவு தயாரிப்பதற்கு வேண்டிய பொருள்களைத் தொட்டுப் பார்த்தல்





பிள்ளைகள் தங்களுக்கு மிகவும் பிடித்த தோசையைப் பட அட்டைகளிலிருந்து தேர்வு செய்தல்

தோசை மாவு எப்படி இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் பிள்ளைகக்கு விளக்கினார்.



பாலர் வகுப்பில் இரண்டாம் ஆண்டில் பயிலும் பிள்ளைகள் தோசை மாவைத் தயாரிக்க வேண்டிய பொருள்களைப்பற்றியும் எப்படி தோசை சுடுவது என்பதைப்பற்றியும் பாலர் வகுப்பின் முதலாம் ஆண்டு பிள்ளைகளுக்கு விளக்கினார்கள்.





பிள்ளைகள் தங்கள் தோசை மாதிரிகளைத் தாள் தட்டால் உருவாக்கினார்கள்.





**மூன்றாம் படிநிலை: நான் கண்டுபிடித்தவை….**

பிள்ளைகள் தோசை மாவு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைப் பார்த்து தெரிந்துகொண்டார்கள். மேலும், இணையத்தின்வழி எப்படித் தோசை மாவைத் தயாரிப்பது என்பதையும் பிள்ளைகள் கற்றுக்கொண்டார்கள். ஆசிரியரின் மேற்பார்வையில் பிள்ளைகள் தோசை சுட்டு மகிழ்ந்தார்கள். பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த வடிவங்களில் தோசையைச் சுட்டார்கள். இதன்மூலம் வடிவங்களின் பெயர்களையும் பிள்ளைகள் கற்றுக்கொண்டார்கள். பின்னர், பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த தோசையைப்பற்றிக் கலந்துரையாடினார்கள்.







பிள்ளைகள் பலவிதமான தோசைகளின் பெயர்களைத் தெரிந்துகொண்டார்கள்.



பாலர் வகுப்பு முதலாம் ஆண்டில் பயிலும் பிள்ளைகள் பாலர் வகுப்பு இரண்டாம் ஆண்டில் பயிலும் பிள்ளைகளுக்குத் தோசையைப் பரிமாறுவதுபோல் பாவனை செய்தார்கள். இதன் மூலம் தமிழர் பண்பாட்டான விருந்தோம்பலைப்பற்றியும் பிள்ளைகள் தெரிந்துகொண்டார்கள்.





**நடவடிக்கையின் நிறைவு:**

உணவகத்தில் கடைக்காரர், சமையற்காரர், காசாளர், பரிமாறுபவர் வாடிக்கையாளர் போன்ற வேடங்களில் நடித்துத் தத்தம் பேச்சுத்திறனைப் பிள்ளைகள் வளர்த்துக்கொண்டார்கள்.

இந்த அதிசய வாரத் திட்டப்பணியின்மூலம் பிள்ளைகள்:

- தன்னம்பிக்கையுடன் பேசினார்கள்.
- நண்பர்களுடன் தமிழில் கலந்துரையாடினார்கள்.
- குழு உணர்வுடன் செயல்பட்டார்கள்.
- தாங்கள் கண்டறிந்தவற்றைப்பற்றிப் பேசினார்கள்.
- திட்டமிட்டுச் செயல்பட்டார்கள்.

Contributed by:
Ramachandran Anandi (TL teacher)
MOE Kindergarten @ Northoaks